திரு. சி. ஆறுமுகம்: உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்லுகிறார்கள். தீர்மானம் திரும்பப் பெறப்படவில்லை. குரல் ஓட்டு மூலம் நிராகரிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஓட்டெடுப்பு என்றால் 'வாய்ஸ் ஓட்' கூடச் சொல்லலாம். ஓட்டெடுப்புக்கு விட்டால் தான் ஓட்டெடுப்பு என்று சொல்லவேண்டுமென்றில்லை; வாய்ஸ் ஓட்டையும் சொல்லலாம். ஆகவே, அதில் தவறு ஒன்றும் இல்லை.

(திரு. சி. ஆறுமுகம் உட்கார்ந்துகொண்டே ஏதோ பேசினார்.)

உறுப்பினர் திரு. சி. ஆறுமுகம், ஏதாவது சொல்லவேண்டுமென்றால் என்னுடைய அனுமதியைப்பெற்று' சொல்ல வேண்டும். சும்மா உட்கார்ந்து கொண்டே பேச வேண்டாம்.

(ஆ) உடுக்குறியிட்ட வினாக்கள் அனைத்தும் எடுத்துக் கொள்ளப்பெற்றுப் பதிலளிக்கப்பெற வேண்டுமென்பது குறித்து.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவரவர்களே, தினந்தோறும் 25 கேள்விகளைப் போட்டு, 19 அல்லது 20 கேள்விகளுக்கு மட்டும் பதிலளிக்கப்படுகிறது; மீதியை அச்சிட்டுத் தருவதாகச் சொல்கிறீர்கள். அப்படி அச்சிட்டும் எங்களுக்குத் தரப்படவில்லை. அச்சிட்டுத் தந்தாலும் எங்களுக்கு அதில் கஷ்டம் இருக்கிறது. ஏனென்றால் அதற்கான துணை வினாக்கள் கேட்டு, தகுந்த விளக்கம் பெற வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, என்னுடைய ஆலோசனை என்னவென்றால் 20 கேள்விகளை மட்டும் போட்டு, அவைகளுக்குக்கான பதில்களையும் விளக்கங்களையும் நாங்கள் பெற ஏற்பாடு செய்யுங்கள். இல்லை என்றால், 25 கேள்விகள் போடுவதாக இருந்தால், துணை வினாக்களை சுருக்கி, எல்லாக் கேள்விகளுக்கும் அவையிலே பதில் அளிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை மிக மிக வரவேற்கத்தக்க ஒன்று. நிறைய கேள்விகளுக்குப் பதிலளிக்கப்பட வேண்டியிருக்கிறது. தினந்தோறும் 20 கேள்விகள் என்று எடுத்துக் கொண்டால் பதில் வந்திருக்கிற கேள்விகள் தேங்கிவிடும். அதனால் 25 கேள்விகளை எடுத்துக்கொள்கிறோம். இப்போதுகூட 'நாங்கள் கையைத் தூக்கிக்கொண்டே இருக்கிறோம், எங்களுக்கு சான்ஸ் கொடுக்கவில்லை' என்று இரண்டு உறுப்பினர்கள், அவர்கள் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், குறை சொன்னார்கள், அப்போது நீங்களும் கேட்டுக் கொண்டுதான் இருந்தீர்கள். உறுப்பினர்கள்

எனக்கு ஒத்துழைப்புத் தருவதைப் பொறுத்திருக்கிறது,கேள்விகளை எடுத்துக்கொள்வதும் பதில் அளிப்பதும். ஆகவே, எல்லா உறுப்பினர்களும் என்னோடு ஒத்துழையுங்கள், எல்லாக் கேள்விகளுக்கும் இங்கே பதிலளிக்க வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தினந்தோறும் கேள்வி நேரத்தில் முன் வரிசையில் இருக்கிற அமைச்சர்களுக்குத்தான் பதில் சொல்லும் வாய்ப்பு ஏற்படுகிறது; கடைசியில் இருக்கிறவர்களுக்கு வாய்ப்பு இல்லை. ஏனென்றால் அவர்கள் பதில் சொல்ல நேரம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே கடைசியில் இருக்கிற அமைச்சர்களின் கேள்விகளுக்கு துணை வினா கேட்டு விளக்கம் பெற எங்களுக்கு வாய்ப்பு இல்லாமலேயே போய்விடுகிறது. அதனால் இப்போது இருக்கிற முறையை மாற்றி, ஒருநாள் விட்டு ஒருநாள் கடைசியில் இருக்கிற அமைச்சர்களின் கேள்விகளை முதலில் எடுத்துக் கொண்டு, தகுந்த விளக்கங்களைப் பெற எங்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுடைய யோசனை நல்லதுதான், ஒருமுறை இங்கிருந்து பதில் சொல்வது, ஒருமுறை அங்கிருந்து பதில் சொல்வது என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறேன்; இனி அப்படியே செய்கிறேன்.

(3) தகவல் கோரல்:

(அ) அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷனின் ஆண்டறிக்கை இந்தியில் தரப்பட வேண்டுமென்று சொல்லப் பெறுவது குறித்து

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, உங்கள் மூலம் இந்த அரசிடம் ஒரு தகவலைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று மத்திய அரசு உறுதி அளித்திருப்பதாக இந்த அவையிலே பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தித் திணிப்பை எதிர்ப்பதாகவும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனக்குக் கிடைத்திருக்கிற ஒரு தகவலை பேரவைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக அமைச்சர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

தமிழ்நாடு அக்ரோ இண்டஸ்டிரீஸ் கார்ப்பரேஷன்ஃபினான்ஷியல் ரிப்போர்ட் இந்தியில்தான் தரப்பட வேண்டும். அப்படி இந்தியில் தரப்படாவிட்டால் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாது என்று ஏதாவது உத்தரவு வந்திருக்கிறதா? அந்த உத்தரவின் விவரங்கள்